# யூலை- 23 - பொதுக்கால 16ம் வார ஞாயிறு

**ஆண்டவரே, என் வேண்டுதலுக்குச் செவிகொடும்: உம் உதவியை நாடும் என் குரலைக் கேட்டருளும். திபா. 86:6**

## முதல் வாசகம் : சீராக்கின் ஞானம்12:13, 16 – 19

பாம்பாட்டியைப் பாம்பு கடித்துவிட்டால் யாரே அவருக்கு இரங்குவர்? காட்டு விலங்குகளின் அருகில் செல்வோர்மீதும் யாரே பரிவு காட்டுவர்?. அவ்வாறே, பாவிகளோடு சேர்ந்து பழகி, அவர்களுடைய பாவங்களிலும் ஈடுபாடு காட்டுவோர்மீது யாரே இரக்கம் காட்டுவர்?சிறிது நேரம் அவர்கள் உன்னுடன் உறவாடுவார்கள் நீ தடுமாற நேர்ந்தால் உன்னைத் தாங்கிக்கொள்ளமாட்டார்கள்.பகைவர் உதட்டில் தேன் ஒழுகப்பேசுவர் உள்ளத்திலோ உனக்குக் குழி பறிக்கத் திட்டமிடுவர் உனக்கு முன் கண்ணீர் சிந்துவர் வாய்ப்புக் கிடைக்கும் போது அவர்களது கொலை வெறி அடங்காது.உனக்குத் துன்பம் நேர்ந்தால் அங்கே உனக்குமுன் அவர்களைக் காண்பாய் உனக்கு உதவி செய்வதுபோல் உன் காலை இடறிவிடுவர். அவர்கள் தங்களது முகப்பொலிவை மாற்றிக்கொண்டு எள்ளி நகையாடும்படி தலையாட் டுவர் கைகொட்டுவர் புரளிகளைப் பரப்புவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீர் நல்லவர். மன்னிப்பவர்.

## இரண்டாம் வாசகம்: உரோமையர் 8: 26 – 27

சகோதர சகோதரிகளே! தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார் ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது.தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்துபெசுகிறாற .உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காகப் பரிந்துபேசுகிறார்.

## நற்செய்தி: மத்தேயு 13 : 24– 43

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார்.அவருடைய ஆள்கள் தூங்கும்போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான். பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் காணப்பட்டன.நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து, "ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்று கேட்டார்கள்.அதற்கு அவர், "இது பகைவனுடைய வேலை" என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம், "நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன? "என்றுகேட்டார்கள்.அவர், "வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக்கூடும்.அறுவடைவரை இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம், "முதலில் களைகளைப் பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்" என்று கூறுவேன்" என்றார்". இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை "ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும்விடச் சிறியது.ஆனாலும், அது வளரும்போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக்கடுகு விதைக்கு ஒப்பாகும்.அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை "பெண் ஒருவர் புளிப்புமாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்."இவற்றையெல்லாம் இயேசு மக்கள் கூட்டத்துக்கு உவமைகள் வாயிலாக உரைத்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை."நான் உவமைகள் வாயிலாகப் பேசுவேன் உலகத் தோற்றமுதல் மறைந்திருப்பவற்றை விளக்குவேன்" என்று இறைவாக்கினர் உரைத்தது இவ்வாறு நிறைவேறியது.அதன்பின்பு இயேசு மக்கள் கூட்டத்தினரை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தார். அப்போது அவருடைய சீடர்கள் அவரருகே வந்து, "வயலில் தோன்றிய களைகள்பற்றிய உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்" என்றனர்.அதற்கு அவர் பின் வருமாறு கூறினார் "நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன்வயல், இவ்வுலகம் நல்ல விதைகள், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் களைகள், தீயோனைச் சேர்ந்தவர்கள்அவற்றை விதைக்கும் பகைவன், அலகை அறுவடை, உலகின்முடிவு அறுவடை செய்வோர், வானதூதர்.எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரையாக்குவார்களோ அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும்.மானிட மகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்று சேர்ப்பார்கள். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.அப்போது நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப்போல் ஒளிவீசுவர் கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்." என்றார்

**தியானம்:** நன்மைக்கும் தீமைக்குமான போராட்டம் இந்த உலகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றது. உண்மையாக நேர்மையாக தூய்மையாக வாழுகின்ற மக்கள் வெறுக்கப்படுவதும், உதாசீனப்படுத்தப்படுவதும், ஏமாற்றப்படுவதும், ஏளனம் செய்யப்படுவதும், அதே நேரத்தில் ஏமாற்றுகிறவர்கள், பொய் பேசுகிறவர்கள், கொலை, கொள்ளையில் ஈடுபடுகிறவர்கள், பிறரைக் காயப்படுத்துகிறவர்கள் எல்லா வசதி வாய்ப்புக்களோடு மகிழ்வாக இருப்பதைப் பார்த்து நம்மில் பலர் ஏன் இப்படி உலகத்தில் நடக்கின்றது? கடவுள் இருக்கின்றாரா? உண்மைக்கு காலம் இருக்கின்றதா? நேர்மையாளர்களுக்குத்தான் துன்பங்கள் கஷ்டங்கள் வருமா? என்று பல்வேறு கேள்விகளை மனதில் எழுப்பி விசுவாச வாழ்க்கையில் தளர்ந்து போகலாம். "நம்முள் ஒவ்வொருவரும் தம்மைக்குறித்தே கடவுளுக்கு கணக்குக் கொடுப்பர்". ஆகவே "அன்பார்ந்தவர்களே, நீங்கள் ஒன்றை மறந்துபோக வேண்டாம். ஆண்டவரின் பார்வையில் ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள் போலவும் இருக்கின்றன. ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலந்தாழ்த்துவதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால் அவர் அவ்வாறு காலந்தாழ்த்துவதில்லை. மாறாக, உங்களுக்காகப் பொறுமையோடிருக்கிறார்". (2பேதுரு.3:8-9) என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மேலும் "ஒவ்வொருவருக்கும் அவரவர் நற்செயல்களுக்கேற்ப கடவுள் கைமாறு செய்வார். மன உறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு அவர் நிலைவாழ்வை வழங்குவார்" (உரோ.2:6,7) என்பதை உணர்ந்து உலகத்து ஆலோசனைகளை, மதிப்பீடுகளை, அங்கீகாரங்களை, விமர்சனங்களை கருத்தில் கொள்ளாமல் "கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்….. இந்த உலகப்போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்" (உரோ.12:1-2) இவ்வாறு நாம் வாழுகின்றபோது நமக்கான கைமாறு விண்ணகத்தில் மட்டுமல்ல இந்த மண்ணகத்திலும் முழுமையாக அனுபவிக்க முடியும். மன உறுதியோடு நற்செயல்கள் புரிவோம்! ஆண்டவரின் ஆசீர்வாதம் பெறுவோம்.